குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி..எண்.58/2023

ம.சா. 1

2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 07–ம் தேதி திங்கள் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.சுஜிதா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூமாலை | தொழில் | |
| தந்தை பெயர் | பழனியப்பன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.48 மணி,

Complainant Poomalai present. Advocate Mr.E.Sanjay present for Advocate Mr.R.Ezhilarasu for Complainant. Accused Senthilkumar present. Advocate Mr.P.Vaithiyalingam present for accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நான் லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிக்கு எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து கடன் கொடுத்து காசோலையை பெற்றுக் கொண்டேன் என்றால் 06.06.2023 ம் தேதி அன்று எனது வீட்டில் வைத்து கடன் தொகையை கொடுத்து வழக்கு காசோலையை பெற்றுக் கொண்டேன். ஆஜர் எதிரி என்னிடம் பூர்த்தி செய்யப்படாத காசோலையை கொடுத்தார் என்றால் தொகையை பூர்த்தி செய்து கையொப்பம் இட்டு கொடுத்தார், பெயர் மற்றும் தேதியை நான் பூர்த்தி செய்து கொண்டேன்.

2. ஆஜர் எதிரிக்கு நான் கடன் கொடுத்த போது அருகில் யாரும் இல்லை. நான் ஆஜர் எதிரிக்கு ரூ.60,000/–ம் கடன் கொடுத்ததற்கான ஆதாரத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எதிரி கொடுத்த காசோலையை தாக்கல் செய்துள்ளேன். நான் கந்துவட்டி தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆஜர் எதிரிக்கு கடன் கொடுத்தது போல் பலருக்கு கடன் கொடுத்து அந்த வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல.

3. 06.06.2023 ம் தேதி ஆஜர் எதிரிக்கு நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் 2017 ம் வருடம் ரூ.35,000/– ம் கடன் கேட்டு முதல் தவணையில் ரூ.10,000/– 2 ம் தவணையில் ரூ.25,000/– ம் மாதம் ரூ.10/– வட்டிக்கு ஆஜர் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 2017 முதல் 2020 ம் ஆண்டு வரை மேற்படி ரூ–35,000/–க்கு ஆஜர் எதிரி வட்டி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. இது தொடர்பாக என் மீது ஆஜர் எதிரி தீவட்டிப்பட்டி காவல்

நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றால் சரி, வேறு பிரச்சனை தொடர்பாக புகார் கொடுக்கப்பட்டது.

எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 01.05 மணி.

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.